**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வு, மார்ச் 2019**

**அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் ( Original Mark Certificates) மற்றும் மதிப்பெண் பட்டியல் (Mark Statement )வழங்குதல் குறித்த**

**செய்திக்குறிப்பு**

மார்ச் 2019 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய **பள்ளி மாணாக்கருக்கு மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு அசல் மதிப்பெண் சான்றிதழ்களை (மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு உட்பட) அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வாயிலாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை 03.06.2019 (திங்கட்கிழமை) முதல் பெற்றுக்கொள்ளலாம்.**

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை முதலாம் ஆண்டு (600 மதிப்பெண்கள்) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான (600 மதிப்பெண்கள்) மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificates) தனித்தனியே வழங்கப்படும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விலோ / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டு பொதுத் தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத மாணாக்கர்களுக்கு, அவர்கள் இரு தேர்வுகளிலும் பெற்ற மதிப்பெண்களை பதிவு செய்து அச்சிடப்பட்ட ஒரே மதிப்பெண் பட்டியலாக (Printed Mark Statement) வழங்கப்படும். இம்மாணவர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற பின்னரே, அவர்களுக்கு மேற்காண் இரு தேர்வுகளுக்கான தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஒம்/–
**இயக்குநர்**

**தேதி: 31.05.2019.**
**இடம்:** சென்னை– **600 006.**